Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ்
# மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

R S Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar 98410 25996
Dr K. Namitha Bhuvaneswari 9444 288784
Dr Sathish Rajkumar 9445 401793
Dr Shanthi R 9884 650945
Dr Salina R 87780 87742
Dr Praveena E 9944 100443

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன், செப்டம்பர் 16, 2026 | இதழ் 156

## முதல்வர் விஜய்யின் லண்டன் பயணத்தில் ரூ.15,300 கோடி முதலீடுகள் ஈர்ப்பு: 10,000 வேலைவாய்ப்புகள் கிடைக்கும்; தமிழ்நாடு அரசு




சென்னை, 16 செப்டம்பர் 2026: முதல்வர் விஜய்யின் லண்டன் பயணத்தில் ரூ.15,300 கோடிக்கும் அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில்; முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் முன்னிலையில் 14.9.2026 அன்று இங்கிலாந்து, இலண்டனில், தமிழ்நாடு அரசின் முதலீட்டு மேம்பாட்டு முகமையான வழிகாட்டி நிறுவனத்திற்கும், முன்னணி உலகளாவிய நிறுவனங்களுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், ஒரு உலகளாவிய வாகன உதிரிபாகங்கள் தயாரிப்பு நிறுவனம், இந்தியாவில் தனது முதல் புதிய உற்பத்தி ஆலையை தமிழ்நாட்டில் நிறுவுவதற்கான விருப்பக் கடிதத்தை வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் ஹிந்துஜா குழும முதலீடுகளின் தற்போதைய முன்னேற்ற நிலை குறித்து அக்குழுமத்தினர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து விளக்கிக் கூறினர். 'ாகன உதிரிபாக உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் மின்கட்டமைப்பு உபகரணங்கள் மற்றும் உலகளாவிய திறன் மையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், நோக்கக் கடிதமும் சேர்ந்து ரூ.15,300 கோடிக்கும் அதிகமான முதலீடுகளைக் கொண்டிருப்பதோடு, தமிழ்நாட்டில் 10,000-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சம்வர்தனா மதர்சன் இன்டர்நேஷனல் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

45-க்கும் மேற்பட்ட நாடுகளில் செயல்பட்டு வரும் முன்னணி பன்னாட்டு நிறுவனமான 'சம்வர்தனா மதர்சன் இன்டர்நேஷனல் லிமிடெட்', தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் வடிவமைப்பு, பொறியியல், உற்பத்தி, ஒருங்கிணைப்பு மற்றும் தளவாடங்கள் சார்ந்த வசதிகளை நிறுவுவதன் மூலம் தனது செயல்பாடுகளை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், மதர்சன் குழுமம் சுமார் ரூ.11,000 கோடி மதிப்பிலான புதிய முதலீட்டு வாய்ப்புகள் மூலம் தமிழ்நாட்டில் சுமார் 7,000 வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளது. இந்த முதலீடுகள், மதர்சன் குழுமத்தின் பிரிட்டன் மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த கூட்டு நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பக் கூட்டாண்மையர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ளன.

வில்சன் பவர் சொல்யூஷன்ஸ் நிறுவனத்துடன் புரிந்தணர்வு ஒப்பந்தம்

பிரிட்டனைத் தலைமையிடமாகக் கொண்ட, திறன்மிக்க மின்மாற்றிகளைத் தயாரிக்கும் வில்சன் பவர் சொல்யூஷன்ஸ் நிறுவனம், திருவள்ளூர் மாவட்டத்தில் தனது மின்மாற்றி உற்பத்திப் பணிகளின் அடுத்த கட்டத்திற்காக ரூ.300 கோடி முதலீடு செய்யவுள்ளது. இதன்மூலம் 400 புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும். இந்த ஆலை, மேம்பட்ட மின் மற்றும் விநியோக மின்மாற்றி உற்பத்தியில் தமிழ்நாட்டின் உற்பத்தித் திறன்களை மேம்படுத்துவதோடு, உள்ளூர் மதிப்புக் கூட்டலையும் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்வீடனின் சிக்மா டெக்னாலஜி குழுமம், எம்பெடட் சிஸ்டம்ஸ், மின்மயமாக்கல் மற்றும் தொழில்துறை டிஜிட்டல்மயமாக்கல் ஆகிய துறைகளில் 600 உயர் மதிப்பு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில், திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னையில் உள்ள தனது உலகளாவிய திறன் மையங்களை, தனது இந்திய நிறுவனமான ஸ்ரியா சொல்யூஷன்ஸ் மூலம் விரிவாக்குவதற்கு தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்துடன் ஏர்ன்ஸ்ட் & யங் நிறுவனம் ஒரு சர்வதேச நிறுவனத்திற்காக, தமிழ்நாட்டில் உலகளாவிய திறன் மையத்தை அமைக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

இந்நிகழ்வுகளில், இங்கிலாந்து நாட்டிற்கான இந்தியத் தூதர் குமரன் பெரியசாமி, ஐ.எஃப்.எஸ்., நிதி மணி திரிபாதி, மினிஸ்டர் (எக்னாமிக்), ஹை கமிஷன் ஆஃப் இந்தியா, லண்டன், நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பொறியியல் வல்லுநர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகள்: முதல்வர் விஜய் வாழ்த்து

சென்னை 16, செப்டம்பர் 2026: தேசத்தின் உள்கட்டமைப்பை நாளும் செதுக்கிவரும் பொறியியல் வல்லுநர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகள்! என்று முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், இந்தியப் பொறியியலின் தந்தை எனப் போற்றப்படும் சர் எம். விஸ்வேஸ்வரய்யா அவர்களின் பிறந்த நாளை தேசிய பொறியாளர் நாளாகக் கொண்டாடும் இந்நாளில், தேசத்தின் உள்கட்டமைப்பை நாளும் செதுக்கிவரும் பொறியியல் வல்லுநர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகள்!

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமையின் துணையுடன் நவீன இந்தியாவைக் கட்டமைப்பதில் பொறியாளர்களின் பங்கு மகத்தானது. சாலைகள், பாலங்கள், அணைகள், விண்வெளி ஆய்வுகள், டிஜிட்டல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, பசுமை ஆற்றல் என நாட்டின் அனைத்துத் துறைகளின் வளர்ச்சியிலும் நமது பொறியாளர்களின் திறனும், உழைப்பும் மிளிர்கின்றன.

பொறியாளர்களின் அறிவாற்றலும் புதுமையான சிந்தனையும் வளமான, வலிமையான, முன்னேற்றம் மிக்க நாட்டினை உருவாக்கத் தொடர்ந்து துணை நிற்கட்டும்! என்று அவர் தெரிவித்து உள்ளார்.

## கூட்டு பிரகடனத்தில் கையெழுத்து – பிரிட்டனில் இருந்து பிரிய தயாரான 3 நாடுகள்!



சென்னை, 16 செப்டம்பர் 2026: பிரிட்டனில் இருந்து பிரிவதற்கான வரலாற்று சிறப்புமிக்க கூட்டு பிரகடனத்தில் ஸ்காட்லாந்து, வடக்கு அயர்லாந்து, வேல்ஸ் நாடுகளின் தலைவர்கள் கையெழுத்திட்டு உள்ளனர். சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி கூட்டுப் பிரகடனத்தில் மேற்கண்ட 3 நாடுகளின் தலைவர்கள் கையெழுத்துட்டு உள்ளனர்.

ஐக்கிய ராஜ்யத்தில் இருந்து பிரிந்து தனிநாடாக இயங்கவும், சுயநிர்ணய உரிமை மற்றும் சுதந்திரத்திற்கான பொதுவாக்கெடுப்பு நடத்துவதற்கும் ஸ்காட்லாந்து, வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்து ஆகிய மூன்று பிராந்தியங்களின் தலைவர்கள் வேல்ஸ் நாட்டின் தலைநகரான கார்டிஃப் நகரில் வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டுப் பிரகடனத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

இதன் மூலம் தங்கள் நாடுகளுக்கு தங்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சுயநிர்ணய உரிமை உள்ளது. லண்டன் வெஸ்ட் மின்ஸ்டர் நாடாளுமன்றத்திற்கு மக்களின் ஜனநாயக முடிவுகளைத் தடுக்கும் உரிமை இல்லை" என்பதை 3 நாடுகளின் தலைவர்கள் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

மேலும் பிரெக்ஸிட் காரணமாகத் தங்கள் நாடுகளின் பொருளாதாரம் கடும் பாதிப்புகளை சந்தித்துள்ளதாக கூறியுள்ள தலைவர்கள், சுதந்திரத்திற்குப் பிறகு மீண்டும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய விரும்புவதாகத் தெரிவித்துள்ளனர். இதில் ஸ்காட்லாந்தும், வேல்ஸும் புதிய தனி நாடுகளாகவும், வடக்கு அயர்லாந்து நாடானது அயர்லாந்து குடியரசுடன் இணைவதன் மூலமும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய திட்டமிட்டுள்ளன. 1997-ஆம் ஆண்டில் அதிகாரப் பகிர்வு தொடங்கியதில் இருந்து, பிரிட்டனில் இருந்து பிரிய விரும்பும் சுதந்திர ஆதரவு தலைவர்கள் இந்த மூன்று நாடுகளிலும் ஒரே நேரத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருப்பது இதுவே முதல் முறையாகும்.

## 21 மாநிலங்களில் பொது சிவில் சட்டம் கொண்டுவர திட்டம்; பாஜக கூட்டணி கட்சிகளின் முட்டுக்கட்டையால் புதிய சர்ச்சை: அமித் ஷாவின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து தலைவர்கள் கருத்து

சென்னை 16, செப்டம்பர் 2026: பாஜக கூட்டணி ஆளும் 21 மாநிலங்களில் 2029ம் ஆண்டுக்குள் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும் என ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அறிவித்துள்ள நிலையில், கூட்டணிக் கட்சிகள் மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்து வருகின்றன. பிரதமர் மோடி தலைமையில் மூன்றாவது முறையாக பாஜக கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. பாஜகவின் முக்கிய தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான பொது சிவில் சட்டம், நாடு முழுவதும் ஒரே கட்டமாக அமல்படுத்தப்படாமல் மாநிலங்கள் வாரியாக அமலுக்கு கொண்டு வரப்பட்டு வருகிறது. ஏற்கனவே உத்தரகாண்ட் மாநிலத்தில் இச்சட்டம் நடைமுறைக்கு வந்துள்ள நிலையில் குஜராத், அசாம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் அதற்கான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதற்கிடையே மும்பையில் பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, 'பாஜக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆளும் 21 மாநிலங்களில் 2029ம் ஆண்டுக்குள் பொது சிவில் சட்டம் கொண்டு வரப்படும்' என்று தெரிவித்தார். அடுத்த மக்களவை தேர்தல் 2029ம் ஆண்டு நடைபெற உள்ள சூழலில், அவரது இந்த பேச்சு தேசிய அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் பாஜகவின் முக்கிய கூட்டணிக் கட்சிகளான தெலுங்கு தேசம் (சந்திரபாபு நாயுடு), ஐக்கிய ஜனதா தளம் (நிதிஷ் குமார்) மற்றும் லோக் ஜனசக்தி (சிராக் பஸ்வான்) ஆகியவை இந்த விவகாரத்தில் எச்சரிக்கையான நிலைப்பாட்டை எடுத்துள்ளன. ஆந்திராவில் ஆட்சியில் உள்ள தெலுங்கு தேசம் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் லாவு ஸ்ரீ கிருஷ்ண தேவராயலு இதுபற்றி கூறுகையில், 'தற்போதைய சூழலில் இதுகுறித்து எங்களுக்குள் எந்த விவாதமும் நடைபெறவில்லை. இதற்கான தேவை எழும்போது பரிசீலிப்போம். இந்த சட்டத்தை ஏற்பதற்கு முன்பாக அனைத்து தரப்பு மக்களின் கருத்துக்களையும் கட்டாயம் கேட்டறிவோம்' என்றார். இதேபோல் பீகாரில் ஆளும் கூட்டணியில் உள்ள ஐக்கிய ஜனதா தளமும் தயக்கம் காட்டி வருகிறது. அக்கட்சியின் செயல் தலைவர் சஞ்சய் ஜா பேசுகையில், 'இது தொடர்பாக ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை நேரில் சந்தித்து பேச உள்ளேன்' என்றார். முன்னதாக பீகார் முதல்வராக நீண்ட காலம் பதவி வகித்த நிதிஷ்குமார், பொது சிவில் சட்ட கருத்துக்கு கொள்கை அளவில் ஆதரவு தெரிவித்திருந் தாலும், அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்கிய ஒருமித்த கருத்தை உருவாக்கிய பின்னரே இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

மற்றொரு கூட்டணிக் கட்சியான லோக் ஜனசக்தி (ராம் விலாஸ்) தலைவர் சிராக் பஸ்வான் பேசுகையில், 'எங்கள் கட்சி பன்முகத்தன்மை க்கு மதிப்பளிக்கிறது. அரசியலமைப்பு சட்டம் பல்வேறு சமூகங்களின் தனித்துவமான பழக்க வழக்கங்களை அங்கீகரித் துள்ளது. எனவே பொது சிவில் சட்ட வரைவை பொதுமக்களின் பார்வைக்கு வெளியிட்டு, அனைத்து தரப்பினருடனும் விரிவான ஆலோசனை நடத்த வேண்டும்' என்றார். கடந்த 2014ம் ஆண்டு முதல் முக்கிய விவகாரங்களில் பாஜகவுடன் மாறுபட்ட நிலைப்பாட்டை எடுத்து வரும் தெலுங்கு தேசம் மற்றும் ஐக்கிய ஜனதா தளம் கட்சிகள், 2019ம் ஆண்டில் 370 சட்டப் பிரிவு ரத்து செய்யப்பட்டபோதும் ஆதரிக் காமல் வெளிநடப்பு செய்தது குறிப்பிடத்தக்கது.

உள்ளது உள்ளபடி

புதன்,
செப்டம்பர் 16, 2026

## ஹீரோ மோட்டோகார்ப் ஒருங்கிணைந்த ஏபிஎஸ் வசதியுடன் ‘Glamour X’-ஐ அறிமுகப்படுத்துகிறது



சென்னை 16, செப்டம்பர் 2026: 214 உலகின் மிகப்பெரிய மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் உற்பத்தியாளரான ஹீரோ மோட்டோ கார்ப், பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஒருங்கிணைந்த ஏபிஎஸ் வசதி கொண்ட ‘Glamour X’-ஐ இன்று அறிமுகப்படுத்தியது. இத்துறையில் ஒரு புதிய மைல்கல்லை எட்டும் வகையில், 125சிசி பிரிவில் ‘சிங்கிள் சேனல் ஏபிஎஸ்’ மற்றும் ‘இண்டகிரேடட் பிரேக்கிங் சிஸ்டம்’ (ஐபிஎஸ்) ஆகியவற்றை இணைத்துக்கொண்ட முதல் மோட்டார் சைக்கிளாக ‘Glamour X’ திகழ்கிறது. இந்த அம்சம் வாகனத்தின் நிலைத்தன்மையை வெகுவாக மேம்படுத்துவதோடு, பிரேக் பிடிக்கும்போது வாகனம் நிற்கும் தூரத்தையும் குறைக்கிறது. இது மேம்பட்ட தொழில்நுட்பத்தை அனைவருக்கும் கொண்டு சேர்ப்பதிலும், ஓட்டுநரின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் போக்குவரத்து தீர்வுகளை வழங்குவதிலும் ஹீரோ மோட்டோகார்ப் கொண்டுள்ள உறுதிப் பாட்டை வலுப்படுத்கிறது.

இந்த அறிமுகம் குறித்துப் பேசிய ஹீரோ மோட்டோகார்ப் நிறுவனத்தின் இந்திய வணிகப் பிரிவின் தலைமை வணிக அதிகாரி அசுதோஷ் வர்மா கூறியதாவது: “125சிசி பிரிவு விரைவான மாற்றங்களைக் கண்டு வருகிறது; வாடிக்கையாளர்கள் நவீன வடிவமைப்பு, மேம்பட்ட தொழில் நுட்பம் மற்றும் சமரசமற்ற பாதுகாப்பு ஆகியவற்றின் கலவையை அதிகம் எதிர்பார்க்கின்றனர். ‘ரைட் மோட்ஸ்’ மற்றும் ‘க்ரூஸ் கன்ட்ரோல்’ போன்ற இத்துறையிலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட அம்சங்கள் மூலம் ‘Glamour X’ ஏற்கனவே இத்துறையில் ஒரு புதிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்துறையிலேயே முதல்முறையாக ஒருங்கிணைந்த ஏபிஎஸ் வசதியை அறிமுகப் படுத்துவதன் மூலம், நாங்கள் ஒரு மோட்டார் சைக்கிளை மட்டும் மேம்படுத்தவில்லை; மாறாக, முழுப் பிரிவிற்கான பாதுகாப்புத் தரங்களையும் மறுவரையறை செய்கிறோம். இந்த அறிமுகம் எங்கள் தயாரிப்பு வரிசையை வலுப்படுத்துவதுடன், நவீன கால இந்திய ஓட்டுநர்களை மேம் படுத்தும் வகையிலான புத்திசாலித்தனமான மற்றும் எதிர்காலத்திற்கு ஏற்ற போக்குவரத்து தீர்வுகளையும் வழங்குகிறது.”

ஏபிஎஸ் மூலம் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு

‘Glamour X 125’ முதன்முறையாக ‘இண்டகிரேடட் ஆன்டி-லாக் பிரேக்கிங் சிஸ்டம்’ ஐபிஎஸ் உடன் கூடிய ஏபிஎஸ் தொழில் நுட்பத்தைக் கொண்டுள்ளது. இது பல்வேறு சாலைச் சூழல்களிலும் துல்லியமான, விரைவாகச் செயல்படக் கூடிய மற்றும் நம்பிக்கையான பிரேக்கிங் செயல்திறனை வழங்குகிறது. இது ‘Glamour X’-ன் ஏற்கனவே உள்ள பாதுகாப்பு அம்சங்களுடன் இணைகிறது; இதில் அவசர கால பிரேக்கிங்கின் போது பின்னால் வரும் வாகனங்களை உடனடியாக எச்சரிக்கும் வேகமாக ஒளிரும் எல்இடி இண்டிகேட்டர்கள் மற்றும் அவசர நிலைகளைத் தெரிவிப்பதற்கான ‘ஹெசார்ட் லேம்ப்ஸ்’ ஆகியவை அடங்கும்.

## சென்னையில் புதிய யூவி ஸ்பேஸ் ஸ்டேஷன் மூலம் அல்ட்ராவைலெட் நிறுவனம் தனது BIGGA பேக்டரி உத்வேகத்தை வலுப்படுத்துகிறது




சென்னை 16, செப்டம்பர் 2026: இந்தியாவின் வளர்ந்து வரும் மொபிலிட்டி சந்தைகளில் நிறுவனத்தின் விரிவடைந்து வரும் சில்லறை விற்பனை வலையமைப்பில் ஒரு முக்கிய மைல் கல்லைக் குறிக்கின்ற வகையில் அல்ட்ரா வயலெட் ஆட்டோ மோட்டிவ் நிறுவனம் போரூரில் புதிய யூவி ஸ்பேஸ் ஸ்டேஷனின் தொடக்கத்தை இன்று அறிவித்தது. நிறுவனத்தின் BIGGA (Big Global Ambition) தொழிற்சாலை அறிவிப்பு, Battery Flex (BaaS) தளத்தின் அறிமுகம், மற்றும் எக்ஸ்-47 க்ராஸ்ஓவர் வெளியீடு ஆகியவற்றைத் தொடர்ந்து, அல்ட்ராவயலெட் நிறுவனத்தின் வளர்ச்சிப் பயணத்தின் ஒரு முக்கியமான கட்டத்தில் இந்த விரிவாக்கம் நிகழ்கிறது.

இந்தச் சேர்ப்பின் மூலம், தமிழ் நாட்டில் நிறுவனத்தின் செயல் திறன் சார்ந்த வாகனங்களுக்கான வாடிக்கையாளர் அணுகலை இந்த நிறுவனம் வலுப்படுத்துகிறது, அதே நேரத்தில் நாடு முழுவதும் அதன் உற்பத்தி, தயாரிப்பு மற்றும் வாடிக்கையாளர் சூழலமைப்பை விரிவாக்கி வரும் அதன் வளர்ந்து வரும் தேசிய இருப்பை மேலும் வலுப்படுத்துகிறது.

புதிதாக நிறுவப்பட்ட யூவி ஸ்பேஸ் ஸ்டேஷன், M/s. Savirro Motors LLP உடன் இணைந்து, எக்ஸ்-47 க்ராஸ்ஓவர் மற்றும் எஃப்77எஸ் உள்ளிட்ட அல்ட்ரா வயலெட் நிறுவனத்தின் செயல்திறன் மிகுந்த மோட்டார் சைக்கிள்களை ஆராய்வதற்கான ஒரு விரிவான அனுபவத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும். ஒரு ஆழ்த்துகின்ற பிராண்ட் இடமாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த வசதி, ஒரே கூரையின் கீழ் சோதனை சவாரிகள், விற்பனை ஆலோசனைகள், தயாரிப்பு செயல் விளக்கங்கள் மற்றும் பரந்த அளவிலான மோட்டார் சைக்கிள் உதிரிபாகங்கள் ஆகியவற்றை வழங்கும்.

இந்த அனுபவ மையம் அல்ட்ரா வயலட் நிறுவனத்தின் முன்னணி செயல்திறன் மோட்டார் சைக்கிள்களான எக்ஸ்-47 மற்றும் எஃப்77எஸ் ஆகியவற்றைக் காட்சிப்படுத்தும்.

இந்த தயாரிப்புகள் 0-60 கேஎம்/ஹெச் வேகத்தை வெறும் 2.8 வினாடிகளில் எட்ட உதவுகின்ற 40.2 ஹெச்பி மற்றும் 100 என்எம் முறுக்குவிசையை வழங்கும் பவர்ட்ரெய்ன் மூலம் மின்சார செயல்திறனை மறுவரையறை செய்கின்றன. 10.3 கேடபிள்யுஹெச் பேட்டரி பேக்கால் இயக்கப்படும் இந்த மோட்டார் சைக்கிள்கள் ஒரு முழு சார்ஜில் ஐடிசி-சான்றளிக்கப்பட்ட 323 கிமீ வரை ரேஞ்சை வழங்குகின்றன.

## வெளிநாட்டு போர்ட்ஃபோலியோ முதலீட்டாளர்களின் பதிவு காலத்தை ஐந்து வணிக நாட்களாகக் குறைக்கின்ற வகையில் சிட்டி நிறுவனம் இஎஃப்பிஐ @ சிட்டி-ஐ அறிமுகப்படுத்துகிறது

சென்னை 16, செப்டம்பர் 2026: வெளிநாட்டு போர்ட் ஃபோலியோ முதலீட்டாளர்களுக்கான (எஃப்பிஐ) பதிவு செயல் முறையை முன்பு சில வாரங்கள் முதல் சில மாதங்கள் வரை எடுத்துக்கொண்ட நேரத்திலிருந்து ஐந்து வேலை நாட்களுக்கு விரைவுபடுத்துகின்ற வகையில் சிட்டி நிறுவனம் இஎஃப்பிஐ @ சிட்டி இன் அறிமுகத்தை இன்று அறிவித்துள்ளது.

இந்த சந்தைக்கு முதல் தீர்வின் அறிமுகமானது, உலகளாவிய முதலீட்டாளர்களிடையே இந்தியா தொடர்ந்து முக்கியத்துவம் பெற்று வரும் நிலையில் வெளிவந்துள்ளது. சர்வதேச முதலீட்டாளர்கள் இந்தியாவை ஒரு மூலோபாய ஒதுக்கீடாக அதிகளவில் மதிப்பிடுகையில், சந்தையில் நுழைவதற்கான நடைமுறைகளின் எளிமை மிக முக்கியமானதாக இருக்கிறது.

இந்தியாவில் உள்ள வெளிநாட்டு பங்குகள் மற்றும் முதலீட்டு (எஃப்பிஐ) சொத்துகளில் மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு மேற்பார்வை வைத்திருக்கும் சிட்டி நிறுவனத்தின் சேவைகள் வணிகம், இந்தியாவில் உலகளாவிய முதலீட்டாளர்களின் இந்த தேவையை பெரிய அளவில் மற்றும் அதிக பொருத்தத்துடன் நிவர்த்தி செய்ய சிறந்த நிலையில் உள்ளது.

இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (எஸ்இபிஐ) தலைவர் துஹின் காந்தா பாண்டே கூறியதாவது: "இந்தியாவில் வெளிநாட்டு போர்ட் ஃபோலியோ முதலீட்டாளர்களுக்கு (எஃப்பிஐ) 5 நாட்களில் விரைவான பதிவு காலக் கெடுவை வழங்க சிட்டி மேற்கொண்ட முயற்சியை நாங்கள் பாராட்டுகிறோம். வெளிநாட்டு போர்ட்ஃபோலியோ முதலீட்டாளர்கள் இந்திய மூலதன சந்தைகளை விரைவாக அணுகுவதற்கு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் எஸ்இபிஐ-யின் முக்கிய நோக்கத்துடன் இது ஒத்துப்போகிறது."

சிட்டி நிறுவனம் வங்கி சேவை பங்குதாரராக இருக்கும் குளோபல் ஃபின்டெக் ஃபெஸ்ட் நிகழ்வில், சிட்டி நிறுவனம் இஎஃப்பிஐ @ சிட்டி-ஐ அறிமுகப்படுத்தியது. சிட்டி நிறுவனத்தின் ஆசியா தெற்குப் பிராந்தியத்தின் சர்வீசஸ் தலைவர் மிருலா ஐயர் கூறுகையில், “எந்தவொரு சந்தையின் ஈர்ப்பும், முதலீட்டாளர்கள் எவ்வளவு எளிதாக அதில் உள் நுழைய முடியும் என்பதைப் பொறுத்தே அமைகிறது. இந்தியா நீண்ட காலமாகவே தனது அபரிமிதமான வாய்ப்புகளுக்காக அறியப்பட்டு வருகிறது, மேலும் இந்த முயற்சி, இச்சாத்தியக் கூறை நனவாக்குவதில் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக இருக்கிறது.

"சிட்டி-யின் இஎஃப்பிஐ என்பது புதுமை, எளிமைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர்-மைய அணுகுமுறை ஆகியவற்றின் மீதான எங்கள் தொடர்ச்சியான கவனத்தின் விளைவாகும்."என்றார்.

## டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் எழுதிய ஆர்.எஸ்.எஸ். நூற்றாண்டு கால சேவைப் பணிகளைப் பதிவு செய்யும் ஆங்கில நூலினை குடியரசு துணைத் தலைவர் சி. பி. ராதாகிருஷ்ணன் புதுதில்லியில் வெளியிட்டார்




சென்னை 16, செப்டம்பர் 2026: ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நூற்றாண்டு கால சேவைப் பணிகள், சமூகப் பொறுப்பு மற்றும் தேசக் கட்டமைப்பில் அதன் பங்களிப்புகளை பதிவு செய்யும் வகையில், தெலங்கானாவின் முன்னாள் ஆளுநரும் புதுச்சேரியின் முன்னாள் துணைநிலை ஆளுநருமான டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் எழுதிய “A Century of Service – 100 Years of the RSS in 100 Acts of Seva” (சேவையின் நூற்றாண்டு ஸ்ரீ 100 சேவைச் செயல்பாடுகளில் ஆர்.எஸ். எஸ். அமைப்பின் 100 ஆண்டுகள்) என்ற ஆங்கில நூலை குடியரசு துணைத் தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் இன்று புதுதில்லியில் உள்ள உபராஷ்டிரபதி பவனில் வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான இணை அமைச்சர் டாக்டர் எல். முருகன், புதுச்சேரி உள்துறை அமைச்சர் திரு. ஆ. நமச்சிவாயம், நூலாசிரியர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன், அல்லயன்ஸ் பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய குடியரசு துணைத் தலைவர், இந்த நூலை வெளியிடுவது தமக்கு தனிப்பட்ட முறையில் மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமையையும் அளிப்பதாகத் தெரிவித்தார்.

புத்தகம் படிக்கும் பழக்கம் இன்றைய காலகட்டத்தில் படிப்படியாகக் குறைந்து வருவது கவலையளிப்பதாகக் குறிப்பிட்ட அவர், தனிப்பட்ட லாப நோக்கமின்றி, நல்லுணர்வை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்; அது வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்நூல் வெளியிடப் படுவதைப் பாராட்டினார்.

“ஒரு நூற்றாண்டு காலம் ஒரு இயக்கம் தொடர்ந்து சேவை செய்ய முடியுமா? அதுவும் பல்வேறு எதிர்ப்புகளுக்கு இடையிலும் தொடர்ந்து செயல்பட முடியுமா?” என சவால்களுக்கு இடையிலும் நூற்றாண்டு காலமாகத் தொடர்ந்து சேவை செய்து வரும் இயக்கமாக ஆர்.எஸ்.எஸ். திகழ்கிறது என குடியரசு துணைத் தலைவர் குறிப்பிட்டார். ஒவ்வொரு தேச பக்தரின் உள்ளத்திலும் “சேவை” என்ற மகத்தான உணர்வு எவ்வாறு உருவாகி, அது சமூகப் பணியாக வெளிப்பட்டது என்பதை இந்நூல் ஆவணப் படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

“இன்றைய செய்தி தான் நாளைய வரலாறு” என்பதைச் சுட்டிக் காட்டிய குடியரசு துணைத் தலைவர், பதிவு செய்யப்படாத நற்செயல்கள் காலப் போக்கில் மறைந்து போகக்கூடும் என்றும், அவற்றை நூல்களாக ஆவணப்படுத்துவது எதிர்கால தலைமுறைக்கு உண்மையான வரலாற்றை வழங்குவதற்கு அவசியம் என்றும் தெரிவித்தார்.

சமூகத்தின் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல், ஏழைகள், விளிம்புநிலை மக்கள் மற்றும் சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு சேவை செய்து வருவதாகக் குறிப்பிட்ட அவர், அதன் பல்வேறு சேவை நடவடிக்கைகள் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றார்.

“சேவை என்பது தர்மம்; அது கடமை” என்ற சிந்தனை ஆர்.எஸ்.எஸ். அமைப் பின் அடிப்படை இலட்சியமாக இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், இந்தச் சிந்தனையே அதன் சேவைப் பணிகளுக்கு அடித்தளமாக அமைந்துள்ளது என்றார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## சாம்சங் இந்தியாவில் கேலக்ஸி எஸ்26 எஃப்இ ஸ்மார்ட்போனை அறிமுகப்படுத்தியது: ஃபிளேக்ஷிப் கேமரா, கேலக்ஸி ஏஐ மற்றும் சக்திவாய்ந்த செயல்திறன்

கோயம்புத்தூர் 16, செப்டம்பர் 2026: சாம்சங் இந்தியா நிறுவனம் தனது கேலக்ஸி எஸ்26 வரிசையின் புதிய ஸ்மார்ட்போனான கேலக்ஸி எஸ்26 எஃப்இ-ஐ இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ளது. மேம்பட்ட கேமரா, சூழலுக்கு ஏற்ப செயல்படும் கேலக்ஸி ஏஐ, சக்திவாய்ந்த செயல்திறன் மற்றும் நேர்த்தியான வடிவமைப்பு ஆகியவற்றை இந்த ஸ்மார்ட்போன் ஒருங்கிணைக்கிறது. கேலக்ஸி எஸ்26 எஃப்இ-ல் 6.7 இன்ச் டைனமிக் எமோல்ட் 2எக்ஸ் டிஸ்ப்ளே, 120ஹெர்இசட் வரை ரெஃப்ரஸ் ரேட், எக்ஸினாஸ் 2500 ப்ராசஸர், 45டபிள்யு ஒயர்ட் சார்ஜிங் வசதியுடன் 4900எம்ஏஹெச் பேட்டரி மற்றும் 50எம்பி வைட், 12எம்பி அல்ட்ரா-வைட் மற்றும் 8எம்பி டெலிஃபோட்டோ 3எக்ஸ் ஆப்டிக்கல் சூம் கொண்ட ட்ரிப்பிள் ரியர் கேமரா அமைப்பு இடம்பெற்றுள்ளன. மேலும், 12எம்பி ஃப்ரன்ட் கேமரா வழங்கப்பட்டுள்ளது.

கேலக்ஸி எஃப்இ வரிசையில் முதன்முறையாக மை ஃபேன்கேம் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் தேர்வு செய்யப்படும் நபரை வீடியோ பதிவு செய்யும்போது ஃப்ரேம்-ன் மையத்தில் தானாக வைத்திருக்க முடியும். சூப்பர் ஸ்டெடி வித் ஹரிசான்டல் லாக் வசதி மூலம் அசைவுகளின்போதும் நிலையான வீடியோக்களை பதிவு செய்யலாம். நைட்டோகிராபி மற்றும் ஃபோட்டோ அஸிஸ்ட் வசதிகள் குறைந்த வெளிச்சத்திலும் சிறந்த புகைப்படங்களை எடுக்கவும், புகைப்படங்களை எளிதாக மேம்படுத்தவும் உதவுகின்றன. ஜெமினி ஆம்னி மூலம் கேலரி-யில் உள்ள புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பயன்படுத்தி புதிய வீடியோ கிளிப்களை உருவாக்கவும், எடிட் செய்யவும் முடியும். ஒன் யூஐ 9 மூலம் மேம்படுத்தப்பட்ட கேலக்ஸி ஏஐ அனுபவங்களும் வழங்கப்படுகின்றன.

இதில் தனிப்பயனாக்கப்பட்ட தகவல்கள் மற்றும் சூழலுக்கு ஏற்ப பரிந்துரைகளை வழங்கும் மேம்படுத்தப்பட்ட நௌவ் ப்ரீஃப் வசதியும், ஒரே நேரத்தில் பல பொருட்களை தேட உதவும் சர்க்கிள் டு சர்ச் வித் கூகுள் வசதியும் இடம்பெற்றுள்ளன.




நீண்டகால பயன்பாட்டை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட கேலக்ஸி எஸ்26 எஃப்இ, 7 தலைமுறைகள் வரை ஓஎஸ் அப்கிரேட்ஸ் மற்றும் 7 ஆண்டுகள் செக்யூரிட்டி அப்டேட்ஸ் வழங்குகிறது. மேலும், ஐபி68 வாட்டர் அண்ட் டஸ்ட் ரெஸிஸ்டென்ஸ் மற்றும் ஆன்ட்ராய்டு மற்றும் ஐஓஎஸ் சாதனங்களிலிருந்து எளிதாக தரவுகளை மாற்றிக் கொள்ளும் மேம்படுத்தப்பட்ட ஸ்மார்ட் ஸ்விட்ச் வசதியும் இதில் இடம்பெற்றுள்ளது. சாம்சங் இந்தியா நிறுவனத்தின் எம்எக்ஸ் பிசினஸ் துணைத் தலைவர் ஆதித்யா பப்பர் கூறுகையில், “இந்தியாவில் அதிகமான நுகர்வோருக்கு கேலக்ஸி அனுபவத்தின் சிறந்த அம்சங்களை வழங்கும் வகையில் கேலக்ஸி எஸ்26 எஃப்இ வடிவமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் வாழும், பணிபுரியும் மற்றும் உருவாக்கும் விதத்திற்கு ஏற்ற அர்த்தமுள்ள புதுமைகளை இதில் ஒருங்கிணைத்துள்ளோம்,” என்றார்.

8ஜிபி + 256ஜிபி மாடலில் கிடைக்கும் கேலக்ஸி எஸ்26 எஃப்இ, Pistachio, Blue berry மற்றும் Graphite நிறங்களில் ரூ.79,999 விலையில் கிடைக்கிறது. பழைய சாதனத்தை எக்ஸ்சேஞ்ச் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு ரூ.8,000 வரை அப்கிரேட் போனஸ், தேர்ந்தெடுக்கப்பட்ட என்பிஎஃப்சி கூட்டாளர்களுடன் 30 மாதங்கள் வரை நோ-காஸ்ட் இஎம்ஐ மற்றும் கூடுதலாக ரூ.3,000 அப்கிரேட் போனஸ், முக்கிய வங்கி கார்டுகளில் ரூ.7,000 கேஷ்பேக் அல்லது 12 மாத நோ-காஸ்ட் பேங்க் இஎம்ஐ ஆகிய சலுகைகள் வழங்கப்படுகின்றன. சாம்சங் இஸ்டோர் மூலம் வாங்கும் வாடிக்கையாளர்கள் 18 மாத பாங்க் இஎம்ஐ வசதியையும் பெறலாம்.

மேற்கண்ட சலுகைகள் ஒன்றுக்கொன்று இணைக்க முடியாதவை என்பதால், வாடிக்கையாளர்கள் ஏதேனும் ஒரு சலுகையை மட்டும் தேர்வு செய்யலாம்.

## யூபிஐ வணிக பரிவர்த்தனைகளுக்கு கட்டணம்: ஒன்றிய நிதியமைச்சகம் அறிவிப்பு



சென்னை 16, செப்டம்பர் 2026: யூபிஐ வணிக பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் வசூலிக்கப்படும் என ஒன்றிய நிதியமைச்சகம் அறிவித்துள்ளது. யுபிஐ மூலம் ஒவ்வொரு ரூ.100 வணிக கட்டணத்திற்கு 40 பைசா கட்டணம் வசூலிக்கப்படும். 2 ஆயிரம் ரூபாய்க்கு மேலான யுபிஐ வணிக பரிவர்த்தனைக்கு 0.4 சதவீதம் கட்டணம் வசூலிக்கப்படும். யுபிஐ பரிவர்த்தனைக்கு 0.4 சதவீதம் கட்டணம் மூலம், ரூ. 5000-க்கு ரூ.20 கட்டணம் வசூலிக்கப்படும். ரூ.75,000-க்கு மேல் யுபிஐ பரிவர்த்தனை செய்தால் ரூ.300 கட்டணம் வசூலிக்கப்படும்.

க்யூஆர் மூலம் மாதம் ரூ.1 லட்சம் வரை வருவாய் பெறும் சிறு வணிகர்களுக்கு எம்டிஆர் கட்டணம் இல்லை. ரயில்வே, எரிபொருள் உள்ளிட்ட குறிப்பிட்ட பிரிவுகளில் ரூ. 2,000-க்கு மேல் ரூ.5 கட்டணம் விதிக்கப்படும். பிற அதிக மதிப்புள்ள பி2எம் பரிவர்த்தனைகளுக்கு 0.4% கட்டணம், அதிகபட்சம் ரூ.300 வரை விதிக்கப்படும். சிறு வணிகர்கள், 3ம் நிலை நகரங்களின் டிஜிட்டல் கட்டமைப்பை மேம்படுத்த தனி நிதியம் உருவாக்கப்படுகிறது

ரூ.2,000 வரையிலான சிறு மதிப்பு யூபிஐ பரிவர்த்தனைகள் 95%க்கும் அதிகமாக இருக்கிறது. ரூ.2,000 வரையிலான அனைத்து யூபிஐ பரிவர்த்தனைகளும் நுகர்வோருக்கு இலவசமாக தொடரும். அக்.15 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட யூபிஐ வணிக பரிவர்த்தனைகளுக்கு புதிய விதிமுறை அமலாகிறது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## பண்டிகை காலத்தை முன்னிட்டு லிமிடெட்-எடிஷன் ஹேர் கலர் பேக்கில் வினுஷா தேவியை மிளிரச்செய்கிறது ‘லோரியல் பாரிஸ்’




சென்னை 16, செப்டம்பர் 2026: பண்டிகை காலத்தை முன்னிட்டு லோரியல் பாரிஸ் ஆனது, ‘காஸ்டிங் க்ரீம் க்ளாஸ்’ஹேர் கலர் பிரிவில் லிமிடெட்-எடிஷன் மாடல்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில், ‘ஃபில்டர் காபி ப்ரவுன்’நிறத்தின் முகமாக நடிகை வினுஷா தேவி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

வினுஷா தனது இயல்பான நடிப்பினாலும், அன்பான அணுகுமுறையினாலும் தென்னிந்திய மற்றும் தமிழ் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றவர். இவரை முதன்மைப்படுத்தி அறிமுகமாகியுள்ள ‘ஃபில்டர் காபி ப்ரவுன்’, கலாச்சாரப் பெருமிதத்துடன் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் புதிய தலைமுறைக்கான அடையாளமாக விளங்குகிறது. இது ஃபில்டர் காபியின் அடர்ந்த நிறத்தைக் கொண்டாடுவதுடன், இப்பிராந்திய மக்களின் அன்றாட வாழ்க்கையிலும் பண்டிகைகளிலும் நீங்கா இடம் பெற்றுள்ள பாரம்பரியத்தையும் பிரதிபலிக்கிறது.

ஒரு சர்வதேச அழகு சாதன நிறுவனம், இந்தியாவின் பண்டிகைகளுக்கென்றே பிரத்யேகமாக ஹேர் கலர் மாடல்களை அறிமுகம் செய்வது இதுவே முதல் முறையாகும். இந்த ஹேர் கலர்களின் நிறங்கள், அவற்றின் பெயர்கள் மற்றும் அட்டைப்படங்களில் (பேக்) இடம்பெற்றுள்ள பிராந்திய பிரபலங்கள் என அனைத்தும் இந்திய கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் முழுமையாகப் பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தயாரிப்புத் தொடர் மூன்று புதிய ப்ரவுன் நிறங்களை அறிமுகப்படுத்துகிறது: தென்னிந்திய ஃபில்டர் காபியின் அடர்ந்த நிறத்தைக் கொண்டு உருவாக்கப்பட்ட 'ஃபில்டர் காபி ப்ரவுன்'; இந்திய தேநீரின் நளினமான கலவையிலிருந்து பெறப்பட்ட 'சாய் லேட்டே ப்ரவுன்'; மற்றும் இலவங்கப்பட்டையின் இயற்கை நிறத்தைப் பிரதிபலிக்கும் 'ஸ்பைஸ்டு சினமன் ப்ரவுன்'. ஒவ்வொரு நிறமும் ஒரு தனித்துவமான இந்தியக் கதையைச் சொல்வதோடு, இந்தியர்களின் தோற்றத்திற்குப் பொலிவூட்டும் அடர்ந்த, பளபளப்பான நிறத்தையும் வழங்குகிறது.

இந்தத் தயாரிப்புத் தொடரின் மூலம், 'லோரியல் பாரிஸ்' தனது சர்வதேச அழகு பராமரிப்பு நிபுணத்துவத்தை நாட்டின் அனைத்துத் தரப்பு நுகர்வோருக்கும் உகந்ததாக மாற்றுவதோடு, இன்றைய அழகு சார்ந்த உரையாடல்களை வடிவமைக்கும் இந்திய தனிநபர்களையும் கலாச்சாரத்தையும் கொண்டாடுகிறது. இந்த லிமிடெட்-எடிஷன் தயாரிப்புகள் பண்டிகை கால தோற்றங்களுக்காகவே பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டவை. அதே சமயம், இது லோரியல் பாரிஸ்-ன் 'கிளைகோலிக் க்ளாஸ் காம்ப்ளக்ஸ்' செறிவூட்டப்பட்ட, அமோனியா இல்லாத நம்பிக்கையான 'காஸ்டிங் க்ரீம் க்ளாஸ்' ஃபார்முலாவைக் கொண்டுள்ளது. இது தலைமுடிக்கு 5 மடங்கு கூடுதல் பளபளப்பையும், ஆரோக்கியமான தோற்றத்தையும் தருவதோடு, வீட்டிலேயே பார்லர் போன்ற ஹேர் கலரிங் அனுபவத்தையும் வழங்குகிறது.

## திரைவிமர்சனம் | ‘என்ன விலை’ விமர்சனம்: சுயமரியாதைக்கும் நீதிக்குமான ஒரு சக்திவாய்ந்த போராட்டம்!




சென்னை 16, செப்டம்பர் 2026: இயக்குநர் சஜீவ் பாழூரின் இந்த முதல் திரைப்படம், ஒரு சாதாரண மனிதனின் சுயமரியாதை போராட்டத்தை உணர்வுப்பூர்வமாக விவரிக்கும் ஒரு சிறந்த சமூக-அரசியல் படைப்பாகும். இது வெறும் த்ரில்லர் கதையாக மட்டும் சுருங்காமல், ஒரு மிகச்சிறந்த காவியமாக மிளிர்கிறது. திரைப்படம்: என்ன விலைஇயக்குநர்: சஜீவ் பாழூர்நடிகர்கள்: கருணாஸ், நிமிஷா சஜயன்இசை: சாம் சி.எஸ்.

ராமேஸ்வரத்தின் பின்னணியில் அமைக்கப்பட்ட இந்தத் திரைப்படம், எளிய மற்றும் உழைப்பாளியான மீனவர் தவசியின் (கருணாஸ்) வாழ்க்கையை விவரிக்கிறது. கடலில் அடித்து வரப்பட்ட ஒரு தங்க பதக்கம் அவரது அமைதியான, சாதாரண வாழ்க்கையை தலைகீழாக மாற்றுகிறது. ஒரு அதிர்ஷ்டமாகத் தொடங்கும் இந்த நிகழ்வு, விரைவில் பொய் வழக்குகள், காவல் துறையின் அத்துமீறல்கள் மற்றும் அதிகார வர்க்கத்தின் ஊழல் நிறைந்த ஒரு கொடூரமான கனவாக மாறுகிறது. தேசிய விருது பெற்ற எழுத்தாளரான சஜீவ் பாழூர், இயக்குநராக அறிமுகமாகியுள்ள இந்தத் திரைப்படத்தில், தங்கம் என்ற பொருளின் மதிப்பை விட மனித மரியாதையின் விலை மதிப்பற்ற தன்மையையே கதையின் மையக் கருவாக மாற்றியுள்ளார். தவசி எப்படி இந்த அநீதியான சட்ட அமைப்பில் சிக்குகிறார், பின்னர் தனது கௌரவத்தை மீட்டெடுக்க எவ்வாறு போராடி வெல்கிறார் என்பதை திரைக்கதை மிக நேர்த்தியாக நகர்த்துகிறது.

கதையை எங்கும் திசைமாறாமல் யதார்த்தமாக வைத்திருந்ததற்காக இயக்குநர் சஜீவ் பாழூருக்குப் பெரிய பாராட்டுகள். செயற்கையான நாடகத்தனங்களைத் தவிர்த்து, அந்தச் சூழ்நிலையின் தீவிரமே பார்வையாளர்களுக்குள் ஒரு அழுத்தத்தை ஏற்படுத்துமாறு படத்தை இயக்கியுள்ளார். இயக்கத்திற்குப் பக்கபலமாக அமைந்துள்ளது சாம் சி.எஸ்.-ன் பின்னணி இசை. தேவையற்ற இரைச்சல்கள் இன்றி, படத்தின் கனமான மற்றும் எதார்த்தமான சூழலை மேம்படுத்தும் வகையில் அவரது இசை மிக அமைதியாகவும் நேர்த்தியாகவும் பயணிக்கிறது. இறுதி வார்த்தை என்ன விலை என்பது தமிழ் சினிமாவின் ஒரு நேர்மையான, துணிச்சலான மற்றும் ஆழமான படைப்பு. இது சமுதாயத்தின் பாரபட்சங்களை தோலுரித்துக் காட்டுவதோடு, மனித மனதின் தளராத நம்பிக்கையையும் கொண்டாடுகிறது.

தரமான கதைக்களம், சிறந்த நடிப்பு மற்றும் திரையரங்கை விட்டு வெளியே வந்த பின்னரும் மனதில் நிலைத்து நிற்கும் ஒரு நல்ல திரைப்படத்தைத் தேடும் தமிழ் சினிமா ரசிகர்களுக்கு, இப்படம் ஒரு ‘மஸ்ட் வாட்ச்’ ஆகும்.

# நடிகை கோமலி பிராத் நடிப்பில் உருவாகியுள்ள சூப்பர் நேச்சுரல் திரில்லரான 'மண்டவெட்டி' திரைப்படத்தின் டீசர் வெளியீடு!

சென்னை 16, செப்டம்பர் 2026: தற்போது வெளியாகியுள்ள 'மண்டவெட்டி' திரைப்படத்தின் இரண்டு நிமிட டீசர் மூலம் இந்த திரைப்படத்தை சுற்றியுள்ள மர்மம் மேலும் தீவிரமடைந்துள்ளது. எப்போது வேண்டுமானாலும் அச்சம் தோன்றக்கூடிய பதற்றமான உலகத்திற்குள் பார்வையாளர்களை இந்த டீசர் அழைத்துச் செல்கிறது. அறிந்தவற்றுக்கும் அமானுஷ்யத்திற்கும் இடையிலான எல்லை மெல்ல மறைந்து போகும் விதத்தில் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. சரண்ராஜ் செந்தில் குமார் இயக்கியுள்ள இந்த திரைப்படத்தின் டீசர், மயக்கத்தில் இருக்கும் ஒரு பெண்ணின் காட்சியுடன் தொடங்குகிறது. அவரது இருப்பே உடனே அச்சத்தை ஏற்படுத்துகிறது.

அதனைத் தொடர்ந்து, மர்மமான சம்பவங்கள், துண்டு துண்டான உரையாடல்கள் மற்றும் தங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியைப் புரிந்துகொள்ள முயலும் கதாபாத்திரங்களின் பதற்றமான காட்சிகள் என டீசர் நகர்கிறது. இந்த உரையாடல்களின் மையத்தில் 'செஞ்சி சாமி' எனப்படும் மர்மமான சக்தி இடம்பெறுகிறது. சுற்றிலும் நிகழும் விசித்திரமான சம்பவங்களுடன் இந்த சக்திக்கு நெருங்கிய தொடர்பு இருப்பது போல் தெரிகிறது. ஆனால், டீசர் எந்தவொரு விடையையும் வெளிப்படையாகக் கூறாமல் மர்மத்தை அப்படியே தக்க வைத்திருக்கிறது. ஒவ்வொரு காட்சிய்ம் அதைவிட பயமுறுத்தும் மற்றொரு உண்மைக்கு அழைத்து செல்லும் என்ற உணர்வை ஏற்படுத்துகிறது.



'மண்டவெட்டி' திரைப்படத்தின் காட்சியமைப்பும் இந்த அமானுஷ்ய உலகத்தை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இருள் சூழ்ந்த நிழல்கள், கதைக்களத்திற்கேற்ற இடங்கள், கதாபாத்திரங்களின் முகபாவனைகள் மற்றும் கணநேரத்தில் தோன்றி மறையும் காட்சிகள் ஆகியவை தீபக் வேணுகோபாலின் பின்னணி இசையுடன் இணைந்து டீசரின் பதற்றமான சூழலை மேலும் அதிகரிக்கின்றன. உளவியல் ரீதியிலான அசௌகரிய உணர்வையும் அமானுஷ்ய மர்மத்தையும் முன்னிறுத்தும் இந்த டீசர், நாட்டுப்புற நம்பிக்கைகளும் மனிதர்களின் அச்சமும் மோதும் ஒரு கதையை எதிர்பார்க்க வைக்கிறது.

திரைப்படத்தின் கதாநாயகியாக கோமலி பிரசாத் நடித்துள்ளார். பலவீனம், கோபம், வேதனை மற்றும் ஆன்மிக மர்மம் என பல்வேறு உணர்வுகளை கொண்ட கதாபாத்திரமாக திரையில் தோன்ற அவர் மேற்கொண்டுள்ள மாற்றத்தையும் டீசர் காட்டுகிறது. மேலும், செஞ்சி சாமி என்பது உண்மையில் என்ன, இந்த உலகையே அதன் இருப்பு ஏன் ஆட்டிப்படைக்கத் தொடங்கியுள்ளது என்ற கேள்விகளையும் டீசர் பார்வையாளர்கள் மத்தியில் எழுப்புகிறது.

டஸ்கர்ஸ் டென் பிக்சர்ஸ் சார்பில் சரண்ராஜ் செந்தில் குமார் இயக்கி, தயாரித்துள்ள 'மண்டவெட்டி' திரைப்படம், உளவியல் ரீதியான பதற்றம், நாட்டுப்புற நம்பிக்கைகள் மற்றும் மனித உணர்வுகளை ஒருங்கிணைக்கும் இருண்ட அமானுஷ்ய கிரைம் த்ரில்லராக உருவாகியுள்ளது. செஞ்சி எனப்படும் சக்திவாய்ந்த உள்ளூர் தெய்வத்தைச் சுற்றியுள்ள மர்மமான தொன்மக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு, ஆழமான அச்சத்தையும் உணர்வுப்பூர்வமான தாக்கத்தையும் ஏற்படுத்தும் வகையில் இப்படத்தின் கதை நகர்கிறது.

இப்படத்திற்கு பிரகாஷ் மனிதன் ஒளிப்பதிவு செய்துள்ளார். குணா பழனிசாமி படத்தொகுப்புப் பணியை மேற்கொண்டுள்ளார். தீபக் வேணுகோபால் இசையமைத்துள்ளார். சண்டைக் காட்சிகளை கௌதம் வடிவமைத்துள்ளார். சங்கீதா சென் ஆடை வடிவமைப்பாளராக பணியாற்றியுள்ளார். டோனி ஜெ ஒலி கலவைப் பணியை மேற்கொண்டுள்ளார். பாலகங்காதரன் டிஐ கிரேடிங் பணிகளை கவனித்துள்ளார். விஜயன் விஎஃப்எக்ஸ் பணிகளை மேற்கொள்கிறார். மகேந்திரன் கந்தசாமி தயாரிப்பு மேலாளராகவும், நர்மதா மேக்கப் கலைஞராகவும் பணியாற்றியுள்ளனர். இப்படத்தின் மக்கள் தொடர்பாளர்களாக சுரேஷ் சந்திரா மற்றும் அப்துல் நாசர் ஆகியோர் பணியாற்றுகின்றனர்.

# "என்ன விலை திரைப்படம் ரசிகர்களுக்கு நிச்சயம் மறக்க முடியாத அனுபவம் கொடுக்கும்" -நடிகை நிமிஷா சஜயன்!

சென்னை 16, செப்டம்பர் 2026: கவனம் ஈர்க்கும் கதைக்களம் மற்றும் நடிப்பு திறனை வெளிப்படுத்தும் திறமையான கதாபாத்திரங்களை தேர்ந்தெடுத்து நடித்து பாராட்டு பெற்று வருபவர் நடிகை நிமிஷா சஜயன். பல்வேறு மொழிகளில் நடித்து வரும் இவர், தனது தலைமுறையின் திறமையான நடிகர்களில் ஒருவராகத் தன்னை நிலைநிறுத்தியுள்ளார். சமீபத்தில் வெளியான, ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்ற இந்திப் படமான 'பபிதா சிங் ரிப்போர்ட்டிங்' உள்ளிட்ட திரைப்படங்களில் இவரது மாறுபட்ட கதாபாத்திரங்கள் இவரது நடிப்பு திறனுக்கு மேலும் வலு சேர்த்துள்ளது. இந்த படங்கள் வரிசையில் 'என்ன விலை' திரைப்படமும் இணைய இருக்கிறது. படத்தின் முன்னோட்டக் காட்சிகள் மற்றும் பத்திரிகையாளர் திரையிடல்களில் கிடைத்துவரும் வரவேற்பு, படக்குழுவினருக்கு உற்சாகத்தை அளித்துள்ளது.

நிமிஷா சஜயன் பகிர்ந்து கொண்டதாவது, "சஜீவ் என்னிடம் கதையைச் சொன்னபோது, எனக்காக எந்தக் கதாபாத்திரத்தை மனதில் வைத்திருக்கிறார் என்பதை அவர் சொல்லவில்லை. 'சரி, இப்போது நீங்களே தேர்வு செய்து கொள்ளுங்கள்' என்று மட்டும் கூறினார். இரண்டு கதாபாத்திரங்களும் மிக அழகாக எழுதப்பட்டிருந்தன. ரிஷியின் கதாபாத்திரமும் அற்புதமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. அதனால், விஜயலட்சுமி அல்லது காஞ்சனா ணூதாபாத்திரத்தில் நடிக்க இருக்கிறேனா என்ற ஆர்வம் இருந்தது. ஆனால், நேர்மையாகச் சொல்வதென்றால், எந்தக் கதாபாத்திரமாக இருந்தாலும் நான் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டிருப்பேன். விஜியின் கதாபாத்திரத்தையும் ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருந்தேன். ஏனென்றால், அந்தக் கதாபாத்திரம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனால், காஞ்சனா கதாபாத்திரமும் எனக்கு பிடித்திருந்தது. அதனால், காஞ்சனா கதாபாத்திரத்தில் நான் நடிக்க போவதாக சஜீவ் என்னிடம் சொன்ன போது எனக்கு கண்ணீர் வந்துவிட்டது. அவரைக் கட்டிப் பிடித்து, 'ஏன் இப்படிச் செய்தீர்கள்?' என்று கேட்டேன். இரண்டு கதாபாத்திரங்களுமே மிகவும் அழகாகவும், வலுவாகவும் எழுதப்பட்டிருந்ததால், எந்தக் கதாபாத்திரத்தை அவர் எனக்கு தரப் போகிறார் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால், 'அது உங்களுக்கான கதாபாத்திரம்' என்று அவர் சொன்ன அந்த நொடி, எனக்கு மிகவும் உணர்ச்சிபூர்வமான தருணமாக அமைந்தது.



'என்ன விலை' திரைப்படத்தின் சிறப்பு என்னவென்றால், ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் ஆழமான உணர்வுப்பூர்வமான பயணம் உள்ளது. கருணாஸ் சாருடன் எனக்கு அதிகமான காட்சிகள் இல்லை. ஆனால், அவரது நடிப்பு அசாத்தியமானது. விஜயலட்சுமி கதாபாத்திரமும் மிகவும் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. அந்தக் கதாபாத்திரத்தில் நடித்துள்ளவரும் சிறப்பாக நடித்துள்ளார். பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகத் துறையினர் திரைப்படத்தையும் என் கதாபாத்திரத்தையும் பாராட்டியுள்ளது மகிழ்ச்சி. இந்தக் கதாபாத்திரங்களை உயிரோட்டமாக உருவாக்கியதற்கான முழுப் பாராட்டும் இயக்குநர் சஜீவுக்கே சேரும். 'என்ன விலை' திரைப்படம் சினிமா ரசிகர்களின் மனதில் என்றும் நினைவில் நிற்கும் படமாக இருக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்" னுன்றார்.

சமூக முக்கியத்துவம் வாய்ந்த பின்னணியில் உருவாகியுள்ள 'என்ன விலை', ராமேஸ்வரம் அருகே கடலில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தும் நாணயங்களை மீட்டெடுத்து வாழும் ஒருவரின் கதையை மையமாகக் கொண்டது. கண்ணியத்துடனும் வாழ்வாதாரத்துக்காகவும் அவர் நடத்தும் போராட்டம், இறுதியில் ஒரு முக்கியமான சட்டப் போராட்டத்திற்கு வழிவகுக்கிறது.

இந்தப் படத்தில் கருணாஸ், நிமிஷா சஜயன், ஷாஷா சிவகுமார், விஜயலட்சுமி வீரமணி, சித்தா தர்ஷன், பூர்ணிமா பாக்யராஜ், ஒய்.ஜி. மகேந்திரன், மொட்ட ராஜேந்திரன், நிழல்கள் ரவி, பிரவீணா, மோகன்ராம், சேத்தன் குமார், கவிதாலயா கிருஷ்ணன், கமலேஷ், கோலி சோடா பாண்டி, ஜே.எஸ். கவி, சுவாமிநாதன், தீபா சங்கர், கவி நக்கலைட்ஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

சஜீவ் பழூர் எழுதி இயக்கியுள்ள இந்தப் படத்தை கலாமயா ஃபிலிம்ஸ் நிறுவனத்தின் சார்பில் ஜிதேஷ் வி தயாரித்துள்ளார். படத்தின் இசையை சாம் சி.எஸ். அமைத்துள்ளார். ஒளிப்பதிவை ஆல்பி ஆண்டனி மேற்கொண்டுள்ளார். படத்தொகுப்பை ஶ்ரீஜித் சாரங் கவனித்துள்ளார். 'என்ன விலை' திரைப்படம் உலகம் முழுவதும் செப்டம்பர் 17 அன்று திரையரங்குகளில் வெளியாகிறது.

# விமான படைப்பிரிவை மேம்படுத்துவது தொடர்பாக மேற்கு வான் கமான்ட் பிரிவு அதிகாரிகள் பங்கேற்ற கருத்தரங்கு

சென்னை 16, செப்டம்பர் 2026: மேற்கு வான் கமான்ட் பிரிவை சேர்ந்த ஸ்டேஷன் மாஸ்டர், வாரண்ட் அதிகாரிகள் பங்கேற்ற கருத்தரங்கு, அதன் தலைமை அலுவலகத்தில் 2026ம் ஆண்டு செப்டம்பர் 14ம் தேதி நடைபெற்றது. இதில், மேற்கு வான் கமான்ட் பிரிவு தலைவர் ஏர் மார்ஷல் ஜார்ஜ் தாமஸ் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டார்.



இந்த கருத்தரங்கில் மேற்கு வான் கமான்ட் பிரிவு பகுதியில் நடைபெற்ற விமானப்படை பயிற்சிகள், அடுத்த கட்ட நகர்வுகள், பயிற்சியை மேம்படுத்துவது தொடர்பாக தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். மேலும், பணிச் சூழலை மேம்படுத்துவது, பணியின்போது வழக்கமாக எதிர்கொள்ளும் சவால்கள், விமானப் படை வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் பயன்பெறும் வகையிலான நலத்திட்டங்களை வலுப்படுத்துவது தொடர்பாகவும் ஆலோசனை நடத்தினர்.

தகவல் தொடர்பு, பணிரீதியாக சிறந்த அணுகுமுறை, விமானப் படை வீரர்களுக்கான நலத்திட்டங்கள் போன்ற விஷயங்களில் அனைத்து விமானப் படை நிலையங்களில் நேர்மறையான சூழலை உருவாக்குவது குறித்தும் இந்த கருத்தரங்கில் ஆலோசிக்கப்பட்டது.

# பொறியாளர்கள் தினத்தையொட்டி, பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார்

சென்னை 16, செப்டம்பர் 2026: பொறியாளர்கள் தினத்தையொட்டி, அனைத்து பொறியாளர்களுக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

நாளைய தினத்தை சிறப்பாக உருவாக்கும் வகையில் கட்டமைப்பு, புதுமைக் கண்டு பிடிப்பு, தீர்வுகளை கண்டறிவது ஆகியவற்றில் பொறியாளர்களின் சிறந்த பங்களிப்பை திரு மோடி பாராட்டியுள்ளார்.

தமது மகத்துவமான பொறியியல் திறனாலும், நாட்டை கட்டமைக்கும் தொலை நோக்கு பார்வையாலும் பல தலைமுறை பொறியாளர்களுக்கு உத்வேகம் அளித்து வரும் சர் எம். விஸ்வேஸ்வரய்யாவுக்கும் பிரதமர் மரியாதை செலுத்தியுள்ளார்.

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் பதிவிட்டிருப்பதாவது: நாளைய தினத்தை சிறப்பாக உருவாக்கும் வகையில் கட்டமைப்பு, புதுமைக் கண்டு பிடிப்பு, தீர்வுகளை கண்டறிவது ஆகியவற்றில் பங்களிப்பை வழங்கும் அனைத்து மகத்துவமான பொறியாளர்களுக்கும் மகிழ்ச்சிகரமான பொறியாளர் தின வாழ்த்துகள். தனது பொறியியல் திறனாலும் நாட்டைக் கட்டமைக்கும் தொலைநோக்கு பார்வையாலும் தொடர்ந்து உத்வேகம் அளிக்கும் சர் எம். விஸ்வேஸ்வரய்யாவுக்கு மரியாதை செலுத்துகிறேன்.